அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 6

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

செல்வங்களுள் சிறந்த செல்வம் எதுவெனக் கேட்டால், கல்விச் செல்வம் என்றே கூறுவேன். ஏனென்றால், வள்ளுவர் கேடில் விழுச் செல்வம் கல்வி என்றே கூறினார். அழிவு இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருளாகும். கல்வி அழிவில்லாதது; என்றும் நிலைத்து நிற்கக்கூடியது. ஆனால், மற்றைய செல்வங்கள் அழிந்துவிடக்கூடியன. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறைந்துகொண்டே போகும். கல்விச் செல்வமானது கொடுக்கக் கொடுக்கக் கூடிக்கொண்டே இருக்கும். இப்படியான சிறப்புமிகு கல்வியைக் கற்போரும் சிறப்புடையவர்களே. எனவே, நாம் எல்லோரும் கல்வியைக் கற்றுச் சிறப்படைவோம்.